# பத்திரிக்கை செய்தி

## புதிய மின் இணைப்பு வழங்க ரூ.4,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உதவி பொறியாளர் மற்றும் வயர்மேன் கைது

புகார்தாரர் திரு.பிரபாகரன், தாமல் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய தந்தை கட்டிய பழைய வீட்டினை இடித்து புதிதாக வீடு கட்ட உத்தேசித்துள்ளார். புதிதாக வீடு கட்ட ஏற்கனவே இருந்த மின்சார இணைப்பை துண்டித்து புதிதாக மின் இணைப்பு வேண்டி தாமல் கிராமத்தில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்துள்ளார். திரு.அசோக்ராஜ், துணை பொறியாளர், மின் இணைப்பு மற்றும் மின் பகிர்மாண கழகம், தாமல் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.4,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காஞ்சிபுரம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 29.11.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அசோக்ராஜ், துணை பொறியாளரின் உத்தரவின்படி திரு.சாந்தமூர்த்தி, வயர்மேன், லஞ்ச பணம் ரூ.4,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.